**தலைப்பு 256 - கம்பஹா மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன கம்பஹா மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 18 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பஹா மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியிருப்பதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்ளாமை | 2.3 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள | 2.9 ஆம் பந்தி |

| | | | |
|---|---|---|---|
| 128(1) (ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.5 ஆம் பந்தி |
| 128(1)(ஐ) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், அலட்சியம், தவறு அல்லது மோசடியின் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது நிதிப்பிரமாணங்கள் 103 இலிருந்து 108 வரையான பிரமாணங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்பற்றப்படுகின்றன என்பதுவும் நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் / ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு மிகை அறவீடுகள் விதிக்கப்படுகின்றன என்பதுவுமாகும். | நட்டங்களும் சேதங்களும் | 2.4 ஆம் பந்தி |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

**எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் வழங்கப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 7,661,139 ஆன 4,440 கதிரைகள் மற்றும் கனெபி கூடாரங்கள் நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் ஊடாக பொருளாதார, சமூக அபிவிருத்தி தொடர்பான பின்தொடர் நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 05 ஆந் திகதிய "MNPEA06/2017" ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கையின் பிரகாரம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு

பொருளாதார, சமூக, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் மேம்பாட்டிற்காக தேவையான பௌதீக வசதிகளை ஏற்படுத்துவற்கோ அல்லது மேம்படுத்துவதற்கோ உட்பட சமூக நலன்களை இலக்காக கொண்ட செயற்திட்டமொன்றுக்காக முதலீடு செய்யப்பட வேண்டியதுடன், அதன்பிரகாரம் செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் மினுவாங்கொட பிரதேச செயலகம் ''யஹகுணதக்ம அமைப்புக்கு ரூபா 500,000 பெறுமதியான அலுவலக உபகரணங்களை வழங்கியிருந்தது.

## 2.2 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 1999 யூலை மாதத்தின் போது விபத்திற்கு உட்பட்டமையால் ஏற்பட்ட ரூபா 189,360 ஆன நட்டத்தை அறவிடுவதற்காக உரிய சாரதிக்கு எதிராக 2001 ஆம் ஆண்டின் போது நீர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும் அந் நடவடிக்கைகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டான பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2006 ஆம் ஆண்டு விபத்திற்கு உட்பட்ட காரணத்தினால் ரூபா 234,850 ஆன நட்டம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஜாஎல பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2015 மே மாதத்தின் போது இடம்பெற்ற விபத்தொன்றினால் ரூபா 187,503 ஆன நட்டத்தை மீளளிப்பதை காப்புறுதி நிறுவனம் நிராகரித்திருந்த போதிலும், இந்நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 யூலை மாதத்தின் போது மஹர பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிதி மோசடியில் மத்திய அரசிற்குரிய ரூபா 166,459 தொகை காணாமல் போயிருந்ததுடன், இதில் அரசிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 19,447 ஆக இருந்தது. எஞ்சிய 147,012 தொகை வெவ்வேறு கடமைகளை நிறைவேற்றிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதியாக இருந்தது. அப்பண மோசடி தொடர்பாக அலுவலக பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அறவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மினுவாங்கொடை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 2014 ஆம் ஆண்டில் கிராம எழுச்சி செயற்திட்டத்தின் கீழ் விளையாட்டரங்கொன்றை அபிவிருத்தி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 250 இலட்சத்திலிருந்து ரூபா 2,012,952 செலவிடப்பட்டு 02 குழாய் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதிகாரப் பிரதேசத்தில் நீர் பிரச்சினையை தீர்வு செய்வதற்காக அந்த இரண்டு குழாய் கிணறுகளைப் பயன்படுத்தி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 500,000 பயன்படுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது அச்செயற்திட்டம் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் விளையாட்டரங்கு அபிவிருத்திக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அனர்த்த முகாமைத்துவம்**

(i) கம்பஹா மாவட்ட செயலகத்தினால் கம்பஹா மாவட்டத்திற்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அனர்த்த சேதங்களை மீள் நிரப்புவதற்காக ரூபா 452,919,888 ஆன நிதிஏற்பாடு 13 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், கம்பஹா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகினால் பாலங்கள், மதகுகள், கால்வாய்கள் திருத்த வேலைகளுக்காக ரூபா 59,038,484 செலவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கம்பஹா மாவட்டத்தின் 7 பிரதேச செயலகங்களுக்குரிய அதிகாரப் பிரதேசத்தினுள் உடைத்த அபாயகரமான மற்றும் பாதுகாப்பற்ற நிலைமையில் திருத்தியமைக்கப்பட வேண்டிய 1,171 பாலங்கள், மதகுகள், மற்றும் வாய்க்கால்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் என்பவற்றை பழுதுபார்த்து முறையாக பராமரிப்பதற்காக போதியளவு கவனமொன்று செலுத்தப்படாமை மற்றும் ஆறுகளை ஓடைகளின் ஒதுக்குப் பிரதேசங்களில் அனுமதியற்ற வகையில் குடியிருந்தமையால் கம்பஹா மாவட்டத்தின் அநேகமான இடங்கள் சிறிதளவில் மழையுடன் கூடிய சந்தர்ப்பத்தில் கூட நீரில் மூழ்கும் நிலைமையொன்று காணப்பட்டது.

(ii) பியகம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வெள்ள நிலைமைகள் காரணமாக பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உலர் உணவு வழங்குவதற்காக கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு மீள்நிரப்பக் கூடிய ரூபா 1,814,734 தொகை 2018 சனவரி 5 ஆந் திகதி வரையிலும் வழங்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக அவ்வவ்போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கடுமையான நீர்ப்பற்றாக்குறை**

திவுலப்பிட்டிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் 123 கிராம சேவையாளர் பிரிவுகளில் 121 இற்கு 2017 சனவரி மாதத்திலிருந்து காணப்பட்ட கடுமையான நீர்ப் பற்றாக்குறைக்கு தீர்வொன்றாக ரூபா 5,840,009 செலவில் 7,200,000 லீற்றர் நீர் 205 நாட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதிகாரப்பிரதேசத்தின் நீர் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக மண் மேடுகள் வெட்டி அகற்றியமை, காடுகள் வெட்டப்பட்டமை, மா ஓயாவில் மணல் அகழ்வதனால், ஆற்றங்கரை அகலமாதல், பாரியளவில் களிமண் எடுத்தல், நிலக்கீழ் நீர் வர்த்தக மட்டத்தில் விற்பனை செய்தல், மேற்பார்வையொன்று இல்லாமல் தனியார் வயல்களில் ஆழமான குழாய் கிணறுகள் நிர்மாணித்தல் மற்றும் கருங்கல் உடைத்தல் போன்ற விடயங்கள் இனங்காணப்பட்ட போதிலும், அவற்றை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச செயலாளருக்கு முழு அதிகாரம் கிடைத்திருக்கவில்லை.

**(இ) அரசின் காணி**

(i) மீரிகம பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் அரசின் காணிகளுக்குரிய சனாதிபதியால் கையொப்பமிடப்பட்ட மானிய உரித்துப் பத்திரங்கள் மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு உரிய உரித்தாளர்களுக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் உரிமையாளர்கள் தொடர்பாக தகவல்கள் கண்டுபிடிக்க முடியாதிருந்த 09 காணித்துண்டுகள், குறித்த மானிய உரித்துக்குரிய காணிகளுக்கு வேறு மானிய பத்திரங்கள்

வழங்கப்பட்டிருந்த 18 காணித் துண்டுகள், மானிய பத்திர உரிமையாளர் மரணத்திருந்த மற்றும் ஏனைய தரப்பினர் குடியிருந்த 02 காணித்துண்டுகள் மற்றும் உரிமையாளர்கள் மரணித்திருந்த வாரிசுகள் குடியிருந்த 04 காணித் துண்டுகள் பல்வேறு காரணங்கள் பேரில் மானியப் பத்திரங்கள் கையளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ii) மினுவாங்கொடை பிரதேச செயலக பிரதேசத்தின் காணி ஆணையாளர் அலுவலகத்தின் பதிவு செய்யப்பட்டிருந்த உரித்தாளர்களுக்கு கையளிக்கப்படாத 24 மானியப் பத்திரங்கள் காணப்பட்டன. இக்காணித்துண்டுகளுக்கு இடையே 13 மானியப் பத்திரங்களின் உரிமையாளர்கள் மரணித்திருந்ததாகவும் வாரிசுகள் குடியிருப்பதாக கிராம சேவையாளரால் அறிக்கை இடப்பட்டிருந்தமையால் அந்த வாரிசுகளுக்கு மானியப் பத்திரங்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளரால் 2017 யூன் மாதத்தின் போது அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக நமவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 06 காணித்துண்டுகளில் மானியம் பெறுனர்கள் குடியிருக்காமை மற்றும் 05 காணித் துண்டுகளுக்காக அதற்கு முன்னர் வேறு உரித்துக்கள் வழங்கப்பட்டிருந்தமையால் மானியப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை

**(ஈ) <u>உத்தியோகபூர்வ விடுதிகள்</u>**

பியகம மற்றும் திவுலுபிட்டிய பிரதேச செயலகங்களிடமிருந்த பிரதேச செயலாளர்களின் உத்தியோகபூர்வ விடுதி வருடக் கணக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் அந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் பிரதான களஞ்சியமாக பயன்படுத்தப்பட்டு வந்தன

.

(உ) **<u>சேவை இல்லங்கள்</u>**

(i) நீர்கொழும்பு பிரதேச செயலகத்தினால் பிரதேச செயலகத்தின் வெள்ளவாய கிழக்கு சனசமூக மண்டபம் மற்றும் சேவைப் இல்லங்கள் என்பவற்றின் நிர்மாணம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 4,000,000 தொகை 4 வருடங்கள் பூராகவும் செலவிடப்பட்டிருந்த போதிலும், போதியளவு நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமையால் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது.

(ii) மினுவாங்கொட பிரதேச செயலகத்திற்குரிய பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2015 ஆம் ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 300,000 தொகையினை பயன்படுத்தி திட்டமொன்று இல்லாமல் எல்லங்கல சேவை இல்ல நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரர் மற்றும் அரசிற்கு இடையிலான உடன்படிக்கையில் இரு தரப்பினரும் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. இச் சேவை நிலையம் பௌதீக பரிசோதனையின் போது தூண்களை எழுப்பி சுவர் கட்டப்படாமல் கூரை அடிக்கப்பட்டிருந்தது.

- வல்பிட்டமுல்ல சேவை இல்ல கட்டிடம் உரிய தரமொன்று இல்லாமல் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 300,000 நிதிஏற்பாட்டில் புதுப்பிக்கப்பட்டு நீர் மின்சார வசதிகள் வழங்கப்படாமல் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஒரு சேவை இல்லத்தில் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரமும் மேலும் 3 சேவை இல்லங்களில் கிராம சேவையாளர்கள் மாத்திரமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

- ரூபா 20 இலட்ச நிதிஏற்பாட்டினை ஈடுபடுத்தி யட்டியன கிழக்கு நில செவன கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இக்காணியின் உரித்து அரசிற்கு காணப்பட்டது தொடர்பில் எழுத்து மூல சான்றிதழ் காணப்படவில்லை. எவரேனும் தரப்பினரினால் இக்கட்டிட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இதன் உரிமை தொடர்பாக முறைப்பாடொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்ளப்படாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(iii) மஹர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 59 இலட்சம் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட சனசமூக மண்டம் 106 சேவை இல்லங்கள் பாவனையற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 70 இலட்சம் செலவு செய்து 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட 04 சேவை நிலையங்கள் 2018 மே மாதம் வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கம்பஹா மாவட்ட செயலகப் பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 08 சேவை நிலையங்களுக்குரிய காணி கையேற்றல் செயற்பாடு 2018 மே மாதம் வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) கம்பஹா பிரதேச செயலக பிரதேசத்தில் காணப்பட்ட 25 சேவை இல்லங்களில் நீர் மற்றும் மின்சாரம் காணப்படாமை, அறைகள் ஒதுக்கீடு, சுகநலன் வசதிகள் காணப்படாமை, சுவர் வெடித்திருந்தமை மற்றும் கதவு யன்னல்களில் குறைபாடு போன்ற சிக்கல்கள் காணப்பட்டன.

**(ஊ) <u>பதில் கடமை நியமனங்கள்</u>**

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 07 பிரதேச செயலகங்களுக்குரிய 91 கிராம உத்தியோகத்தர்கள் வருடக் கணக்காக பல பிரிவுகளில் பதில் கடமைகளில் நிறைவேற்றி வந்தனர்.

**(எ) <u>ஓய்வூதிய பிரிவு</u>**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 09 பிரதேச செயலகங்களுக்குரிய 298 ஓய்வூதியம் பெறுவோரின் நாளதுவரையாக்கப்பட்ட கோவைகள் இல்லாமல் ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 03 பிரதேச செயலகங்களுக்குரிய தற்காலிக கோவைகளோஇல்லாத 50 உத்தியோகத்தர்களின் கோவைகளை தயாரித்து மாவட்ட செயலகத்தினூடாக ஓய்வூதிய திணைக்களத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 பெப்ரவரி வரையிலும் அதற்காக அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(iii) போதியளவு தகவல்கள் இல்லாமை, கோவைகள் காணாமல் போனமை மற்றும் கோவை இல்லாமை போன்ற அடிப்படையில் 09 பிரதேச செயலகங்களில் 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதிய திருத்தம் செய்யப்படாத 1,144 கோவைகள் காணப்பட்டன.

(iv) நீர்கொழும்பு, கட்டான, மற்றும் களனி ஆகிய பிரதேச செயலகங்களில் தேசிய அடையாள அட்டை இலக்கம் இல்லாமலும் போலியான அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்பட்டு தரவு முறைமை மூலம் ஓய்வூதியம் செலுத்தப்பட்ட 44 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(v) ஓய்வூதியம் பெறுவோர் அல்லது விதவையொருவர் அல்லது வேறு ஓய்வூதிய நலனாலியொன்று பெறும் ஒருவர் இறந்தால் உடனடியாக அத்தகவல்களை பிரதேச செயலகங்களுக்கு வழங்கி கொடுப்பனவு இடைநிறுத்துவது துரிதமாக செயற்பட வேண்டிய போதிலும், 05 பிரதேச செயலகங்களுக்குரிய 05 ஓய்வூதியம் பெறுவோர் இறந்து 69 நாட்களுக்கும் 1070 இற்கும் இடைப்பட்ட தாமதத்தின் பின்னர் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்ட 79 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இவ்வாறு மரணித்த உத்தியோகத்தர்களுக்காக கூடுதலான கொடுப்பனவை மீள அறவிடுவதில் இடரொன்று காணப்பட்டதுடன் தெரியப்படுத்தின் தாமதத்திற்கு பொறுப்பு வாய்ந்தவர்களுக்காக எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வத்தள பிரதேச செயலகத்திற்குரிய ஓய்வூதியம் பெறும் ஒருவர் 2015 சனவரி 01 ஆந் திகதி மரணித்திருந்ததுடன் அவருக்காக இலங்கை வங்கியின் வெலிசர கிளையில் பேணப்பட்டு வந்த கணக்கிற்கு 2015 சனவரி மாதம் முதல் 2016 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் ரூபா 483,937 தொகையொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. 2017 செப்தெம்பர் மாதத்தின் போது ரூபா 376,316 தொகை மீளக் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 107,621 தொகை இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vii) நீர் கொழும்பு பிரதேச செயலகத்தில் செயற்படாத கோவைகளின் அளவு 3,662 என இனங்காணப்பட்டிருந்த போதிலும் இந்த கோவைகளுக்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) களணி பிரதேச செயலகத்தின் 19 ஓய்வூதியம் பெறுவோர் அந்த அதிகாரப் பிரதேசத்தில் குடியிருக்காமல் இருந்ததுடன் கோவைகள் இல்லாமையால் அவர்களின் தகவல்களை குறித்த பிரதேச செயலகங்களுக்கு மாற்றுவதற்கு முடியாமல் இருந்தது.

(ix) வத்தள பிரதேச செயலகத்திற்குரிய ஓய்வூதியத்திற்காக உரித்துப் பெறாத உப தபால் அதிபர் ஒருவர் ஓய்வு பெறும் போது அவருக்கு ரூபா 954,918 தொகையொன்று ஓய்வூதியமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அத்தவறு வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் தவணைகளாக மொத்தப் ரூபா 46,000 வீதம் அறவிடப்பட்டிருந்தது. 2014 யூலை 31 ஆந் திகதி மேற்படி ஓய்வூதியம் பெற்றவர் மரணமடைந்திருந்ததுடன் அரசிற்கு ரூபா 408,918 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை கண்டு பிடித்து அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்புக்கள் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 799.75 | 768.02 | 31.73 | 3.97 |
| | மூலதனம் | 61.30 | 35.76 | 25.54 | 41.66 |
| | மொத்தம் | **861.05** | **803.78** | **57.27** | **6.65** |
| **2014** | மீண்டுவருபவை | 728.67 | 723.38 | 5.29 | 0.73 |
| | மூலதனம் | 41.65 | 24.45 | 17.20 | 41.29 |
| | மொத்தம் | **770.32** | **747.83** | **22.49** | **2.92** |
| **2015** | மீண்டுவருபவை | 949.43 | 944.99 | 4.44 | 0.47 |
| | மூலதனம் | 294.80 | 77.31 | 217.48 | 73.77 |
| | மொத்தம் | **1,244.23** | **1,022.30** | **221.92** | **17.83** |
| **2016** | மீண்டுவருபவை | 1,011.80 | 997.43 | 14.37 | 1.42 |
| | மூலதனம் | 167.00 | 166.87 | 0.13 | 0.08 |
| | மொத்தம் | **1,178.80** | **1,164.30** | **14.50** | **1.23** |
| **2017** | மீண்டுவருபவை | 999.33 | 993.17 | 6.16 | 0.62 |
| | மூலதனம் | 468.00 | 125.87 | 342.12 | 73.10 |
| | மொத்தம் | **1,467.33** | **1,119.04** | **348.28** | **23.73** |

**பிற அமைச்சுக்களாலும் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தல்**

ஏனைய 31 அமைச்சுக்களாலும் 21 திணைக்களங்களாலும் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே 4,973.44 மில்லியன் மற்றும் ரூபா 125.72 மில்லியன் என ரூபா 5,099.16 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 3,932.35 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,166.8 அதாவது 22.88 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

கம்பஹா மாவட்ட செயலகத்திற்குரிய 256011 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 103 | 102.97 | 64 | 73.3 | 280 | 270.31 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 1,926,475 ஆக இருந்ததுடன் அந் நிலுவைக் கடன் மீதிகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவற்றை அறவிடுவதில் பலவீனமான நிலைமையொன்று காணப்பட்டது.

(ஆ) மினுவாங்கொடை பிரதேச செயலகத்திற்குரிய கிராம சேவையாளர் ஒருவர் உரிய கல்வித் தகைமைகள் இல்லாமல் சேவையில் இருந்ததன் காரணமாக வேலை இடை நிறுத்துவதற்கு உட்பட்டிருந்ததுடன் அவரின் கடன் மீதியான ரூபா 71,483 தொகை 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி அறவிடாமல் காணப்பட்டது.

(இ) மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் பணமோசடியொன்று காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியொகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 337,390 ஆன கடன் மீதியொன்று காணப்பட்டது.

## 2.7 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 673.99 மில்லியனாக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 13 பிரதேச செயலகங்களுக்குரிய 2 ஆண்டுகளை விஞ்சிய 261 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்ட பெறுமதி ரூபா 8,757,005 மற்றும் 4 அலுவலகங்களில் 32 சந்தர்ப்பங்களில் இரண்டாவது தரப்பினர் கொடுப்பனவுப் பெறுமதி ரூபா 433,350 தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 பிரதேச செயலகங்களுக்குரிய காணி இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கான 10 ஆண்டுகளை விஞ்சியிருந்த 28 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 6,268,552 ஆன வைப்புக்கள் தொகை தொடர்ந்தும் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

கம்பஹா மாவட்ட செயலகத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 1,369.34 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 41 | 40 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 64 | 52 | 12 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 3,153 | 2,655 | 4,98 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 132 | 112 | 20 |
| | மொத்தம் | 3,390 | 2,859 | 5,31 |